## புதிய கால்நடை தீவன தொழிற்சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல்!

# ஆவின் நிறுவனம் சார்பில் ரூ.43.61 கோடியில் திட்டப்பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூலை 30-**

**ஆவின் நிறுவனத்தின் சார்பில் ரூ.43.61 கோடி ரூபாய் மதிப்பிலான 4 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய கால்நடை தீவன தொழிற்சாலை அமைக்கும் பணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் (ஆவின்) சார்பில் 10 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட 2 பால் பண்ணைகள், 5,000 லிட்டர் திறன் கொண்ட தயிர் மற்றும் மோர் தயாரிக்கும் ஆலை மற்றும் ஆய்வகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, கடலூர் மாவட்டம், ம. பொடையூரில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை தீவன தொழிற்சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் 9067 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்று அடுக்கு கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் 4 இலட்சம் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 36 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, 34 இலட்சம் லிட்டர் பால் பாக்கெட்டுகளாக நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. மேலும், 2 இலட்சம் லிட்டர் பால், ஆவின் நிறுவனத்தால் வெண்ணெய், பால் பவுடர் போன்ற உபபொருட்கள் தயாரிக்கப்படுகிறது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் (ஆவின்) சார்பில் 10 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட 2 பால் பண்ணைகள், 5,000 லிட்டர் திறன் கொண்ட தயிர் மற்றும் மோர் தயாரிக்கும் ஆலை மற்றும் ஆய்வகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, கடலூர் மாவட்டம், ம. பொடையூரில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை தீவன தொழிற்சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவ நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், பால்பண்ணை மேம்பாட்டு துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் சு. வினீத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழக அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை ஆவின் நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக 94.41கோடி ரூபாய் செலவில் புதிய பால் பதப்படுத்தும் மற்றும் பால் பாக்கெட் தயாரிக்கும் தொழிற்சாலைகள், புதிய ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலைகள், சேமிப்புக் கிடங்குகள், ஆய்வுக் கூடங்கள், பால் கொள்முதல் பிரிவுக் கட்டடங்கள், நிருவாக அலுவலகக் கட்டடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஆவின் நிறுவனம் பால் பொருட்களை கொண்டு இளைய தலைமுறையினரை கவரும் வகையில் பலாப்பழ ஐஸ்கிரீம், குளிர்ந்த காஃபி, ஆவின் ஹெல்த் மிக்ஸ், வெண்ணெய் கட்டி (Butter Chiplets). பிரீமியம் மில்க் கேக், யோகர்ட் பானம் (மாம்பழம் மற்றும் ஸ்ட்ராபெரி சுவையில்), பாயாசம் மிக்ஸ், பால் புரத நூடுல்ஸ், டெய்ரி ஒய்ட்னர் போன்ற பல்வேறு புதிய பொருட்களை தயாரித்து விற்பனை செய்து சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் (ஆவின்) முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்**

பால் நுகர்வோர்களுக்கு தரமான பால் தங்கு தடையின்றி கிடைக்க வழிவகை ஏற்படுத்தும் விதமாக கரூர் மாவட்டம், தோரணக்கல்பட்டியில்

2 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட பால் பண்ணை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், வேங்கிக்காலில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட பால் பண்ணை;

நுகர்வோர்களுக்கு தரமான தயிர் மற்றும் மோர் தங்கு தடையின்றி கிடைக்க வழிவகை ஏற்படுத்தும் விதமாக, திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் பால் பண்ணையில் 3 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 5,000 லிட்டர் திறன் கொண்ட தயிர் மற்றும் மோர் தயாரிக்கும் ஆலை;

திருவள்ளூர் மாவட்டம், மாதவரத்தில் 1 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நோய்க் கிருமிகளை கண்டறியும் மேம்படுத்தப்பட்ட ஆய்வகம்;

**என மொத்தம் 10 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

**புதிய கால்நடை தீவன தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுதல்**

பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் கலப்புத் தீவன தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடை தீவன ஆலைக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

ம.பொடையூர் கிராமத்தில் 6.77 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ள இந்த தீவன தொழிற்சாலையால் இப்பகுதியைச் சார்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதுடன், கடலூர், விழுப்புரம் மற்றும் அருகில் உள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் கறவைமாடுகளுக்கு தரமான கலப்புத் தீவனம் கிடைக்கப் பெறும். இதன்மூலம், பால் உற்பத்தி அதிகரிப்பதுடன் பால் உற்பத்தியாளர்களின் வருவாயும் உயரும்.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவ நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், பால்பண்ணை மேம்பாட்டு துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் சு. வினீத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஊராட்சி ஒன்றியங்களில் புதிய கட்டிடங்கள் : முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 391 வாகனங்களை வழங்குதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2023-24 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கள அலுவலர்கள், செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தை கண்காணிக்கவும் உரிய காலத்தில் முடித்திடுவதை உறுதி செய்யவும் கள ஆய்வு மேற்கொள்ளவும், இப்பணிகளை திறம்பட கண்காணிக்க ஏதுவாகவும் புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 391 வாகனங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள், செயற் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள், உதவி செயற் பொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை அலுவலர்களிடம் வழங்கினார்.

**கழக ஆட்சியில் 725 புதிய வாகனங்கள்!**

கழக அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக மொத்தம் 83 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 725 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் மூன்றாம் ஆண்டு “கருஞ்சட்டை விருது” வழங்கும் விழா 27.07.2024 அன்று சென்னை அன்பகத்தில் துணைத் தலைவர் செல்வின் சௌந்தர்ராஜன் தலைமையில் நடைபெற்றது. பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் நோக்கவுரை ஆற்றினார். பொள்ளாச்சி மா. உமாபதி, புலவர் வெற்றியழகன், வாலாசா வல்லவன் ஆகியோருக்கு கருஞ்சட்டை விருதுகளையும், “சாக்ரடீஸ் ஸ்டுடியோ” பேராசிரியர் முரளி, “இவன் இந்திரன்” இராஜ்குமார், “எனவே பேசுவோம்” இஷானா ஆகியோருக்கு சமூக ஊடக கருஞ்சட்டை விருதுகளையும் அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கி சிறப்புரையாற்றினார். எழுத்தாளர் சூர்யா சேவியர் விருதாளர்களை பாராட்டி உரையாற்றினார். பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், துணைத் தலைவர்கள் சிங்கராயர், மகாலட்சுமி, பொருளாளர் எழில். இளங்கோவன், துணைப் பொதுச் செயலாளர் கா.சு.நாகராஜன், தோழர்கள் பெல் இராசன், லாரன்ஸ், அ.இல.சிந்தா, முத்தையா குமரன், மாறன், சந்தானம், நெல்லை பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைப் பொதுச் செயலாளர் இரா.உமா வரவேற்புரையாற்றினார். துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து தொகுப்புரை வழங்கினார்.

ஒருங்கிணைந்த வளர்ச்சி - மாநிலங்கள் ஒத்துழைப்பு வேண்டுமென்று

## பிரதமர் கோருகிற வாய்ப்பந்தல் நிழல் தராது!

### ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜூலை 30-

கூட்டாட்சித் தத்துவத்தை குழிதோண்டி புதைத்துவிட்டு, மறுபுறத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சி - மாநிலங்கள் ஒத்துழைப்பு வேண்டுமென்று பிரதமர் கோருகிற வாய்ப்பந்தல் நிழல் தராது என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



தீக்கதிர்

2024 ஜூலை 29 திங்கட்கிழமை

கூட்டு முயற்சிக்கு வேட்டு வைப்பது யார்?

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்ட அனைத்து மாநிலங்களின் கூட்டு முயற்சியும், ஒத்துழைப்பும் அவசியம். வளர்ச்சியடைந்த மாநிலங்கள், வளர்ச்சியடைந்த பாரதம் என்பதை உருவாக்குவோம் என நிதி ஆயோக் கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து 29.7.2024 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்ட அனைத்து மாநிலங்களில் கூட்டு முயற்சியும், ஒத்துழைப்பும் அவசியம். வளர்ச்சியடைந்த மாநிலங்கள், வளர்ச்சியடைந்த பாரதம் என்பதை உருவாக்குவோம் என நிதி ஆயோக் கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நிதி ஆயோக் கூட்டத்தை தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட 9 மாநில முதல்வர்கள் புறக்கணித்துள்ளனர். இவர்களில் பா.ஜ.க. கூட்டணி ஆளும் புதுவை யூனியன் பிரதேச முதல்வரும் ஒருவர். பா.ஜ.க. கூட்டணியில் உள்ள பீகார் மாநில முதல்வர் நிதிஷ் குமாரும், சட்டமன்றக் கூட்டத்தை காரணம் காட்டி நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

ஒன்றிய பட்ஜெட்டில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் புறக்கணித்ததற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட மாநிலங்களின் பெயர்களைக் கூட இடம்பெறச் செய்யாமல் தவிர்த்துள்ளது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அன்றாடம் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இந்நிலையில் “மாநிலங்களின் கூட்டு முயற்சி அவசியம்” என்று பிரதமர் உபதேசம் செய்கிறார். அவர் பட்டியலிட்டுள்ள தேசிய கல்விக் கொள்கை, புதிய குற்றவியல் சட்டங்கள், விஸ்வகர்மா யோஜனா போன்றவை அநீதி நிறைந்ததாக மாறியுள்ளன. புதிய கல்விக் கொள்கை என்ற பெயரிலும், விஸ்வகர்மா யோஜனா என்ற பெயரிலும் அனைவருக்கும் கல்வியை மறுத்து குலக்கல்வியை புகுத்துகிறது ஒன்றிய அரசு. குற்றவியல் திருத்தச் சட்டம் குறித்து மாநிலங்களின் கருத்தை கேட்டு பெறவில்லை. நாடாளுமன்றத்திலும் முறையாக விவாதம் நடத்தப்படவில்லை. ஒன்றிய அரசு தொடர்ந்து மாநில அரசின் உரிமைகளை மறுத்து வருகிறது.

இயற்கை பேரிடர் நிதி, மற்றும் வரிப் பங்கீட்டில் மாநிலங்கள் வஞ்சிக்கப்படுகின்றன. ஒன்றிய அரசிடம் அனைத்து அதிகாரங்களும் கொஞ்சம் கொஞ்சமாக குவிக்கப்படுகின்றன. தேசிய திட்டக்குழு கலைக்கப்பட்டு நிதி ஆயோக் உருவாக்கப்பட்டிருப்பது கூட இதன் ஒரு பகுதி தான். கூட்டாட்சித் தத்துவத்தை குழிதோண்டி புதைக்கும் நரேந்திர மோடி அரசு மறுபுறத்தில் மாநிலங்களின் ஒத்துழைப்பை கோருவது வெட்கக் கேடானது. நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்ற மேற்குவங்க முதல்வர் முழுமையாக பேசுவதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் ஒருங்கிணைந்த வளர்ச்சி என்றும், மாநிலங்கள் ஒத்துழைக்க வேண்டு மென்றும் பிரதமர் கோருகிற வாய்ப்பந்தல் நிழல் தராது. அனைத்து மாநிலங்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். பா.ஜ.க. தன்னுடைய சித்தாந்த சித்து விளையாட்டை நிறுத்திக் கொள்வது நல்லது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (29.07.2024) ஆணையர் அலுவலகத்தில் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான இலச்சினையை (LOGO) வெளியிட்டார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தென்சேரிமலை ஆதீனம் தவத்திரு முத்து சிவராமசாமி அடிகளார், ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர் திருமதி தேசமங்கையர்க்கரசி, கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.